**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 212 of 2024

DATE : 08.07.2025

Depositions of witness for Prosecution

PW : 2

| | | | |
|---|---|---|---|
| Name | மாரிமுத்து | Caste | |
| Father/Husband's Name | சின்ன கருப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of July 2025

**(2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : -**

1) நான் லட்சுமியாபுரத்தில் வசித்து வருகிறேன் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். கடந்த 10 12 2012ஆம் தேதி எனக்கு சொந்தமான ஒரு ஆடும் அ.சா.1க்கு சொந்தமான ஐந்து ஆடுகளும் வெள்ளைச்சாமிக்கு சொந்தமான இரண்டு ஆடுகளும் ஆட்டு தொழுவத்தில் அடைத்து வைத்திருந்தோம். மறுநாள் ஆட்டு கொட்டகையை திறந்து பார்த்தபோது 8 ஆடுகளை காணவில்லை. இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். 14.12.2012ம் தேதி காணாமல் போன ஆடுகள் கிடைத்து விட்டதாக நத்தம்பட்டி காவல் நிலையத்திலிருந்து போன் மூலம் தகவல் சொன்னார்கள். நானும் அ.சா.1ம் வெள்ளைச்சாமியும் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு சென்று ஆடுகளை அடையாளம் காட்டினோம். நீதிமன்றத்தில் மனுசெய்து ஆடுகளை பெற்றுக் கொண்டோம். இது சம்பந்தமாக போலீசார்

என்னை விசாரித்தார்கள்.

**3ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : -**

1) வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அய்யனார் வீட்டிற்கும் எனது வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் பக்கத்து வீடு தான். எனது வீட்டை தாண்டிதான் அய்யனார் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால்ச ரிதான். அ.சா.1ன் தொழுவம் எனது வீட்டிற்கு அருகில் தான் உள்ளது. தொழுவத்தில் இரவு யாரும் தங்குவார்களா என்றால்இல்லை. எத்தனை மணிக்கு தொழுவம் சென்று பார்த்தோம் என்றால் காலை 4 மணி இருக்கும். ஆடுகள் கிடைத்துவிட்டதாக கவால் நிலையத்தில் இருந்துஎப்போது தகவல் கிடைத்தது என்றால் 14.12.2012ம் தேதி. நான் பூவந்தி காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. ஆடுகளை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேனா அல்லது காவல் நிலையத்தில் இருந்து பெற்றுக்கொண்டேனா என்றால்காவல் நிலையத்தில் இருந்து பெற்றுக்கொண்டேன். நான் சொல்வது போல ஆடுகள் எதுவும் காணாமல் போகவில்லை என்றாலும் அ.சா.1க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**2, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : -**

3ம் எதிரி தரப்பில்செய்த குறுக்கு விசாரணையை 2, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது-

**மறு விசாரணை : - இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு